www.Padasalai.Net www.Trb.Tnpsc.com

Tsi12T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

27-02-2024

## வகுப்பு 12

## பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும்.

2) நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1) சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம்பெற்ற நூல்

அ) மஸ்னவி ஆ) நிலவுப்பூ இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம்

2) 'ஏழாண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ......' தொடர்களில் வெளிப்படும் செய்திகள் .............

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி; 2 தவறு ஆ) 1 தவறு; 2 சரி

இ) இரண்டும் தவறு ஈ) இரண்டும் சரி

3) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது .............

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4) "மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம் .............

1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

2. பொதிகையில் தோன்றியது

3. வள்ளல்களைத் தந்தது

அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி

இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி

5) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை .............

அ) அறவோர் துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

6) 'நடிப்புலகின் சக்கரவர்த்தி' என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர் .............

அ) நம்பியார் ஆ) ஜெமினி கணேசன் இ) முத்துராமன் ஈ) சிவாஜி கணேசன்

7) உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) சுரதா ஈ) வாணிதாசன்

8) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே .............

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

9) காய்நெல் - என்பதன் இலக்கணக்குறிப்பு .............

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

10) இராமலிங்க அடிகள் இயற்றிய நூல் .............

அ) திருவாசகம் ஆ) திருவருட்பா இ) திருமந்திரம் ஈ) திருச்சாழல்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

11) ஐம்பெருங்காப்பியம் என்னும் தொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் ............

அ) சிவஞானமுனிவர் ஆ) மயிலைநாதர்

இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

12) திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையார் ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவிலார்

13) பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ

ஆ) வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாய் இரு

ஈ) இந்தா போறான் தருமன்

14) அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடு

அ) உவமை ஆ) உவமேயம் இ) உருவகம் ஈ) உள்ளுறை உவமை

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

16) செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பது யாது?

17) கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

18) போரினால் பாதிக்கப்பட்ட நிலத்தில் மலர்ந்த மலர் உலகிற்குச் சொல்லும் செய்தி யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.

21) சென்னையை அலங்கரித்த ஆறுகளைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) விடியல், வனப்பு இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

23) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?

24) **ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) அருங்கானம் ஆ) தலைக்கோல்

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) அமர்ந்தனன் ஆ) செய்த

26) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

ஆ) பனைமட்டையால் கூரை வைத்திருந்தனர்.

27) **பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க:**

அ) புல், புள் **(அல்லது)** ஆ) கலை, களை

28) **கலைச்சொல்லாக்கம் தருக:**

அ) Artist ஆ) Checkout

29) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டும்.

30) [illegible] யாவை?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1 2×4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

31) வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32) சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.

33) 'மனத்திட்பம்' அவசியமான பண்பு என்பதைக் குறள் வழி விளக்குக.

34) கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு - 2 2×4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

35) வாழிடம் பற்றி சங்க இலக்கியம் கூறுவது யாது?

36) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் தருக.

37) மயிலை சீனி. வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுதுக.

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3 3×4=12

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:**

39) அ) ஏகதேச அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்களுள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

**- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

அ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

**(அல்லது)**

ஆ) தன் கையே தனக்குதவி

41) **பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்களுள் மூன்றினை எழுதுக:**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலையுடை கதருடையதாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல்வெற்றிஎமக் கெய்த வேண்டும்

**- கவிமணி**

42) வெண்ணிலா **(அல்லது)** வானவில் என்ற தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

43) **பின்வரும் ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:**

அ) East or west home is best.

ஆ) Hast makes waste.

இ) Hear much speak little.

ஈ) Sense of humour is a healthy way of life.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

43) செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்துணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக:**

தமிழுக்குச் 'செம்மொழித்' தகுதியைப் பெற்றுத் தந்த இலக்கியச் செல்வங்களுள் மிகமிகத் தொன்மையானவை சங்க இலக்கியங்கள். அவற்றை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருவகையாகப் பிரிப்பர். தொகை என்பது பல பாடல்கள் ஒன்றாக இணைத்து தொகுக்கப்பட்டதைக் குறிக்கும். பாட்டு என்பது ஒவ்வொரு நெடிய தனிப்பாட்டைக் குறிக்கும்.

**வினாக்கள்:**

1. தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்த இலக்கியங்கள் யாவை?
2. சங்க இலக்கியங்களின் இரு வகைகள் யாவை?
3. தொகை என்பது யாது?
4. பாட்டு என்பது யாது?

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) அ) தமக்கு இழைத்த இன்னல்களை இறைமகன் இயேசு பொறுத்த பாங்கினை விவரி.

**(அல்லது)**

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி விளக்குக.

45) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46) அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் .......... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

47) அ) "காய்நெல்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'மகற்கு' என முடியும் திருக்குறள்.

----------

சிவக்குமார் மு, ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வல்லம் - 627809, தென்காசி மாவட்டம்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com